கட்டுரை 10 · ARTICLE 10 | பக்தி இலக்கியமும் சித்தர் இலக்கியமும்

# ஆண்டாள் திருப்பாவையில் தகவல் தொடர்பியல் கூறுகள்

*Information and Communication Theories in Thiruppavai*

**முனைவர் செ. ராஜேஸ்வரி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி, ராஜபாளையம்

***Dr. S. Rajeshwari**, Assistant Professor of Tamil, Ramco Institute of Technology, Rajapalayam*

**மின்னஞ்சல்:** rajeshwariraji19910@gmail.com

**பக்கங்கள்:** 63–69

## ஆய்வுச் சுருக்கம்

புண்ணிய மாதமாம் மார்கழித் திங்களின் மங்கை ஒன்று கூடி மாதவனை, இருள் விலகும் வைகறைப் பொழுதில் சென்று வழிபடக்கூடிய ஓர் அற்புதமான பக்தி இலக்கியம் ஆண்டாள் அருளிய திருப்பாவை.

ஆயர் குலத்து தோழிப் பெண்களின் உறக்கம் கலைத்து, அனைவரும் இறைவனாம் பேரொளியை நோக்கி ஒரு பெரும் கூட்டத்தை வழிநடத்திய ஆண்டாளின் திருப்பாவை பக்திப்பேழை மட்டுமல்ல, அது உன்னதமான தகவல் தொடர்பியல் (communication science) கலைக் களஞ்சியம்

சில நூற்றாண்டுகளுக்கு முன்பே, ஒரு செய்தியைத் திரளான மக்களிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பது என்ற தொடர் பாடல் நெறியை ஆண்டாள் தன் பாசுரங்களால் ஆளுமையுடன் கையாண்டுள்ளதைக் காணலாம்.

இவ்வாய்வு, ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களில் பொதிந்துள்ள இருவழித் தகவல் தொடர்பு (Two-way communication), குறியீட்டியல் உத்திகள் (Semiotics), நேர்மறை ஊக்கப்படுத்துதல் (Positive motivation), குழுத்தொடர்பாடல் போன்ற நவீன தகவல் தொடர்பியல் கூறுகளை, சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற பிற தமிழ் இலக்கிய பேராளுமைகளின், மேற்நோக்கங்களோடு ஒப்பிட்டு, அதன் அறிவியல் தன்மையை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

பறவைகள் அதிகாலையில் எழுப்பும் “குக்கூ’ ஒலிகள், கருவானம் சிவந்து கதிரவன் புறப்படும் முன் தோன்றும் விடியலின் அழகையும் செய்தியை கடத்தக் கூடிய சிக்னல்களாக மாற்றிய ஆண்டாளின் காட்சி வழிக் குறியீடுகள் (Visual Signs), ஒவ்வொரு இல்லத்தின் வாயில்களின் நின்று, நயம்படப் பேசி, உள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் மங்கையரின் உறக்கம் கலைக்கும் இருவழி உரையாடல் உத்திகள்,**“வையத்து வார்வீர்காள்”** என்று உலகத்தோரை அறைகூவல் விடுக்கும் வெகுஜனத் தொடர்பு (Mass communication) ஆகிய இவையாவும் ஆண்டாளை ஒரு சிறந்த நவீன தொடர்பியல் நிபுணராகப் பறைசாற்றுகிறதெனில் அது மிகையாகாது.

**திறவுச்சொற்கள்:** திருப்பாவை; தகவல் தொடர்பு; இருவழித் தொடர்பு; குறியீட்டுத் தொடர்பு; குழுத் தொடர் பாடல்; வெகுஜன ஊடகம்; சமூகவியல்; நேர்மறை உத்திகள்

## Abstract

On Mondays in the holy month of Margazhi, the women gather together and worship Madhavan at the Vaikarai hour when darkness recedes. A wonderful devotional literature, Thirupavai, is bestowed by the Lord.

The sleep of the female friends of the priestly family was disturbed and everyone led a large crowd towards the Lord. Andal's Thiruppavai was not only a devotional ark, but it also taught us about communication.

Centuries ago, Andal mastered the art of communication, how to convey a message to a large number of people. It can be seen that Andal has masterfully handled the communication method through her poems.

This study examines the two-way communication embedded in Andal's Thiruppavai verses, semiotics, positive motivation, and group communication.

The aim of this is to compare modern information and communication elements such as Group Dynamics with the perspectives of other Tamil literary masterpieces such as Sangam literature, Thirukkural, and Kambaramayanam, and to examine its scientific nature.

The "cuckoo" sounds made by pigeons in the early morning, the beauty of the dawn that appears before the sun rises when the sky turns red, and Andal's visual signs that transform it into signals that can convey a message, the two-way conversation techniques that stand at the gates of each house, speaking softly, and disturbing the sleep of the women sleeping inside,

It would not be an exaggeration to say that all these things, including mass communication, which has made the world cry "Vayathu Varveergal", proclaim Andal as an excellent modern communication expert.

**Keywords:** Sacred Maiden; Information Communication; Two Way Communication; Symbol Communication; Group Communication songs; Mass Media; Sociology; Positive Motivation

## அறிமுகம்

இலக்கியம் என்பது மனிதனின், மனித சமூகத்தின் உள்ளத்திலுள்ள எண்ணங்களையும், பண்பாட்டையும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துக்காட்டுகின்ற காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. பக்தி இலக்கியம் அதாவது இயக்கம் தோன்றிய காலத்தில் புதிய பரிமாணம் ஏற்பட்டது. இறைவனை அடைவதையே முதன்மை நோக்கமாகக் கொண்ட பக்தி இலக்கியங்கள் வெறுமனே ஆன்மீகக் கருத்துக்களை மட்டுமே கூறாமல், மக்கள் தங்களுக்குள் எப்படி தொடர்பு கொள்வது, தனது மக்களை, சமூகத்தை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்னும் வாழ்வியல் உத்திகளையும் கற்றுள்ளன. அந்த வகையில் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாள் அருளிய "**திருப்பாவை**" பக்திப் பனுவலாக மட்டுமல்லாமல் மிகச்சிறந்த ஒரு தகவல் தொடர்பியல் (Communication) ஊடகமாகவும் திகழ்கிறது.

பக்தி இலக்கியமாக மட்டுமே போற்றப்படும் ஆண்டாளின் திருப்பாவை, இக்காலத்தின் நவீன தகவல் தொடர்பியல் கோட்பாடுகளின் பின்னனியில் ஒரு புதிய கோணத்தில் இவ்வாய்வு கட்டுரை அமைய உள்ளது. பாசுரங்களில் கூறப்பட்டுள்ள புள்ளினங்களின் ஒலி,விடியற்காலையின் ஒளிர்நிறம் போன்ற இயற்கையான நிகழ்ச்சிகள் திருப்பாவையில் ஆண்டாள் காட்சி மற்றும் ஒலி வழி குறியீட்டுத் தொடர்புகளாக (Visual & Audio Semiotics) எவ்வாறு ஆளுமையுடன் பயன்படுத்தியுள்ளார் என்பதை அடையாளப்படுத்தவும், வீட்டில் உறங்கிக் கொண்டுள்ள தோழியரை எழுப்பும் உரையாடல் கலந்த பாசுரங்கள் மீண்டும் வீட்டின் உள்ளே இருந்து வரும் பதில் ஆகியன இவை இருவழித் தகவல் தொடர்பு (Two-way Communication) மற்றும் உறங்குபவரையும் இன்சொல்லாய் ஈர்ச்சகம் நேர்மறை ஊக்கபடுத்தும் உத்திகள் எனலாம்.

இது தனிமனிதருக்கோ, ஒரு குழுவிற்கான பாடல் அல்ல, பாசுரம் அல்ல, வையத்து 'வாழ்வீர்கான்' என்று உலகத்தார்க்கு அறைகூவல் விடுத்த மக்கள் கூட்டத்திற்கான தொடர்பு (Mass communication) ஆகிய இவையாவும் ஆண்டாள் நாச்சியாரை ஒரு சிறந்த தொடர்பாடல் நிபுணராக எடுத்தியம்புகின்றன.

சுருக்கமாக கூற வேண்டுமானால், மிக கடினமாக தத்துவங்களை, ஏழை, எளிய பாமர மக்களுக்கும் புரியும் வண்மை, மிக எளிய சொற்களால் பக்தி உடைத்தாரின்

மூலம் வழி நடத்தி, அதை ஒரு சமூக இயக்கமாக மாற்றிய பெருமை ஆண்டாளையே சேரும்.

இத்திருப்பாவையானது அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்திருக்கும், வாழும் ஒரு "வெற்றிகரமான தகவல் தொடர்பு பிரச்சாராம்" என்பதையும் இவ்வாய்வு இலக்கிய நயத்துடன் விளக்குகிறது.

வள்ளுவரின் "திறனறிந்து சொல்லுக" என்ற மொழி இலக்கணத்திற்கும், கம்பனின் சுந்தரகாண்டம் காட்டிய அனுமனின் "செய்தித் தெளிவிற்கும்" மிகச் சிறந்த சான்றாக இத்திருப்பாவை திகழ்கிறது.

குறியீட்டுத் தொடர்பு (Visual & Audio Semiotics) ஆதிகாலத்து மனித இனம் தொட்டே இந்த குறியீட்டுத் தொடர்பு என்பது இருந்து கொண்டேன் தான் இருக்கிறது. இயற்கையின் அசைவுகள், வான்வெளி கோலங்கள், அவற்றின் நிறங்கள், பறவைகளின் ஒலிகள், விலங்குகளின் அலறல்கள் என காணும் பொருட்கள் எல்லாம் குறியீட்டுத் தொடர்புடையனவாகவே இருப்பதைக் காண்கிறோம்.

ஆண்டாள் தன் திருப்பாவை பாசுடங்களில் எவ்வாறு குறியீடுகளாக இயற்கை அசைவுகளைப் பயன்படுத்தி இருக்கிறாள் என்பதைக் காணும் போது வியப்பாகிறது.

"புள்ளும் சிலம்பின் காண்"

(பாசுரம் 6)

அதாவது விடியற்காலை நேரத்தில் பறவைகள் தங்கள் கூடுகளிலிருந்து இரைதேட புறப்பட்டுச் செல்லும். அப்போது அவை 'கீச்,கீச்' என ஒலியெழுப்பும் அது விடியலுக்கான இயற்கை என்கிறார், ஆண்டாள் நாச்சியார் சமிக்கை (Signal) அடுத்ததாக

"கீழ்வானம் வெளுத்தது<br>
எருமை சிறுவீடு<br>
மேய்வான் பரந்தன காண்"…

(பாசுரம்-8)

அதாவது விடியும் போது, சூரியன் உதிப்பதற்கு முன் வானம் வெளுக்கும், இருள் கொஞ்சம் கொஞ்சமாய் பிரியும். இதை கோதை நாச்சியார் "கிழக்குத் திசை வெளுத்து விட்டது, எருமைமாடுகள் பனிப்புல் மேயப் புறப்பட்டுவிட்டது, நீயும் உறக்கம் கலைந்து எழுந்திரு என தோழிக்கு இயற்கையின் சமிக்கையை தருகிறாள்.

ஆயர்பாடியில் அதிகாலை நேரம், அங்குள்ள பெண்கள் பெரிய பானைகளில் தயிர் கடைவது வழக்கமான ஒன்றே. ஆனால் ஆண்டாளுக்கு இது மத்தளம் முழங்குவது போன்ற பேரரவமாக கேட்கிறது.

"மத்தள ஓசை ...............பேரரவம்<br>
கேட்டிலையோ.....

**இவை சைகை ஒலிகள் மூலம் நேரமாகிவிட்டது, விடிந்து விட்டது என்ற செய்தியைக் கடத்துகின்றனவல்லவா! இது போலவே**

"வைகு புலர் விடியல்"

(நற்றினை -254 மற்றும்)

"காகம் உறங்கின, கைதை விரிந்தன…<br>
வைகறை வந்தது"

(சிலப்பதிகாரம் அந்திமாலைச் சிறப்புச் செய்காதை)

சங்க கால புலவர்களும், இளங்கோவடிகளும் கூட விடியலை உணர்த்தப் பறவைகளின் ஒலியையும், இயற்கையின் அதிசயங்களையும் குறியீடுகளாகப் பயன்படுத்தியது போல, ஆண்டாளும் அன்றாடக் காட்சிப் பதிவுகள் மூலம் கால நேரத்தை தன் தோழியருக்கு எடுத்து கடத்துகிறார்.

## ஆய்வு நோக்கங்கள்

- ஆண்டாள் அருளிய திருப்பாவை பாசுரங்களில் தகவல் தொடர்பியல் கூறுகளைக் கண்டறிதல்.
- திருப்பாவைப் பாசுரங்களில் ஆண்டாள் கையாண்ட இருவழி உரையாடல் (Dialogue method) மூலம் ஆன்மீகக் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டு நவீன தகவல் தொடர்பியல் கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல்.
- ஆண்டாள் நாச்சியார் தன் திருப்பாவை பாசுரங்களில் பயன்படுத்தியுள்ள நேர்மறை வலுவூட்டல் (Positive Reinforcement) மற்றும் உரையாடல் உத்திகளை (Dialogue Techniques) ஆய்வு செய்தல்
- குழு ஆளுமை மற்றும் தலைமைத்துவத் திறனை ஒருங்கிணைத்து, ஊக்கப்படுத்தி, வழிநடத்திய ஆண்டாளின் குழுத் தகவல் தொடர்புத் திறனை (Group Communication Skills) ஆராய்தல்.
- மக்கள் தொடர்பு மற்றும் ஊடக உத்தியை எளிய பாமர மக்களையும் சென்றடையும் வகையில் இத்திருப்பாவையில் மக்கள் தொடர்பியல் (Mass Communication) எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் திறனாய்வு செய்தல்.

## ஆய்வு நெறிமுறையியல்

- பண்புசார் பகுப்பாய்வு அணுகுமுறை (Qualitative Analysis Approach) இவ்வாய்வு முதன்மையாக கொள்கிறது.
- திருப்பாவை பாடல்களில் உள்ள மொழி, உவமைகள், குறியீடுகள் மற்றும் உரையாடல்களைத் தகவல் தொடர்பியல் நோக்கோடு பகுப்பாய்வு செய்ய

இவ்வணுகுமுறை பயன்படுகிறது.

## தரவு ஆதாரங்கள்

இவ்வாய்வுக்கு முதன்மைத் தரவு ஆதாரமாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த திருப்பாவை திருப்பாவை பாடல்கள் (30)

- பக்தி இலக்கியமும், மேலாண்மையும் சார்ந்த முந்தைய ஆய்வுக் கட்டுரைகள்.
- திருப்பாவை பாசுரங்களில் ஆழ்ந்துள்ள ஆன்மிகத் தத்துவங்கள், பக்தி நெறிகள், சமயக் கோட்பாடுகள் மற்றும் இலக்கிய நயங்கள் இவ்வாய்வுக்குத் தேவையான தகவல் தொடர்பியல் மேலாண்மை உத்திகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகிறது.

## இருவழித் தொடர்பு

சிலப்பதிகாரத்தை **“உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள்” என்பர் சான்றோர். அதுபோலவே இத்திருப்பாவையின் ஆறு முதல் பதினைந்து வரையிலான பாசுரங்கள் முழுமையாக உரையாடல் (Dialogue) வடிவில்**

**அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். இது ஒரு தலைப்பட்சமான தகவல் பரப்புதல் அல்ல பாசுரம் -9 இதற்கு நல்ல சான்றாகும்.**

“**மாமன் மகளே!,மாணிக்க தவம் தாழ்த்திறவாய்**” என வாசலில் நின்றழைக்க, உள்ள தூங்குபவள் “**சுவர் இன்னும் எழுந்திருக்கவில்லையா? என்று கேட்கிறாள்.**

இதற்கு உடனே வெளியே நின்று கொண்டிருப்பவர்கள்

> “நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
> போற்றத் பறைதரும் புண்ணியனால்”

என்று அவளுக்குப் பதிலளித்து தெளிவுபடுத்துகின்றனர். இந்த கேள்வி – பதில் உத்தி தகவல் தொடர்பில் பங்கேற்பாளர்களின் கவனத்தை (Engagement) ஈர்க்கும் மிகச்சிறந்த வழியாகும். நவீன தொடர்பியலின் இது (Feedback) உத்தி எனப்படுகிறது. திருவள்ளுவரின் குறட்பா- 91-ல்

> “இன்சொல்லால் ஈரம் அளைகுப் படிநிலவாம்
> செம்பொருள் கண்டார்வாய் சொல்”

அதாவது எப்போதுமே தூங்குபவர்களை **“ஏன் இன்னும் தூங்குகின்றாய்?”** என்று கோபித்து, கடிந்து கொள்ளாது, இன்சொல்லால் பேசி கவரும் உத்தியை ஆண்டால் கையாண்டுள்ளது, இது வள்ளுவரின் இன்சொல் பேசும் தகவல் தொடர்பு இலக்கணத்திற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

## நேர்மறை ஊக்கப்படுத்துதல் மற்றும் தூண்டுதல்

ஒரு நிறுவனத்தின் பணியாளர்களை, மேலாளர் அல்லது தகவல் தொடர்பாளர் தன் குழுவை எப்படி தட்டிக் கொடுத்து, வழி நடத்த வேண்டும் என்பதற்கு ஆண்டாளே சான்றாகத் திகழ்கிறார், உறங்கிக் கொண்டிருப்பவர்களை, சட்டென கடிந்து எழுப்பினால் கோபம் வரும், ஆனால் அதுவே புகழ்ந்து பேசி எழுப்பினால் .... மகிழ்வுடன் எழுவார்கள்.

பாசுரம் 11-ல் ஆண்டாள்:

> “கற்றுக்கறவைக் கணங்கள்
> பலகறந்து செற்றார் திறவழியச் சென்று
> செருச் செய்யும் குற்றமொன்றில்லாத
> கோவலர் தம் பொற்கொடியே!”

புற்றரவல்குல் புனமயிலே போதராய் அதாவது ஒரு செயலுக்கு ஒரு வரை தூண்ட வேண்டுமாயின் அவர்களைப் பாராட்டி பேச வேண்டும். இங்கு உறங்கும் தோழியை “**குற்றமில்லாத ஆயர் குலத்தின் பொற்கொடியே !அழகான மயிலே! என வர்ணித்துப் பாராட்டிப்பேசுவது, அவளை உடனே மேலும் பாசுரம் 1,14,இவைகளில் செல்வப் பெண்டாட்டி, நன்னாளால் என்ற இனிய வார்த்தைகளைக் கூறி நேர்மறை அவர்கள் நேர்மறை எண்ணங்களை விதைக்கிறார் கிளம்புவதற்குத் தூண்டுகிறது.**

## குழுத்தொடர்பு மற்றும் தலைமைப் பண்பு

(Group Dynamics and Team Communication) நவீன காலத்திற்கு ஏற்ப சொல்வதெனில் இதை “மாஸ் கம்யூனிகேஷன்” (Mass communication) கூட்டப் பிராத்தனை எனலாம்.

ஒரு செய்தியை ஒவ்வொருவராக தனித்தனியாகச் சொல்வதை விட, கூட்டுப் பிராத்தனை மற்றும் பாடல்கள் மூலம் சமூக இயக்கமாக மாற்றுவது.

இதைத்தான் ஆண்டாள் நாச்சியார் பாசுரம்(2)- ல் **“வையத்து வாழ்வீர்காள்!” என்று உலக மக்களே கேளுங்கள் என்று பொதுமக்களுக்கு, அதுமட்டுமல்ல நம் நாட்டிற்குள் மட்டுமல்ல அறைகூவல் விடுக்கிறார்.**

**“கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்”........(பாசுரம் 27). இதில் ஆண்டாள் தான் மட்டுமே இறைவனை தொழுது முக்தி அடைய எண்ணாமல் அனைவரையும் ஒருங்கிணைந்து, ஒரு சமூக தகவல் தொடர்பு பிரச்சாரமாக (community communication campaign) இந்த பாவை நோன்பை நடத்துகிறார்.**

## செய்தியின் தெளிவு மற்றும் உறுதி அல்லது (இலக்கு)

எந்த நேரத்ததிலும், தகவல் தொடர்பில் நம் சொல்ல வரும் செய்தியானதை குழப்பமில்லாமலும், தெளிவாகவும் சொல்ல வேண்டும், நாம் யாரிடம், எதற்காகச் சொல்கிறோம் என்பதை ஆண்டாள் 29-ம் பாசுரத்தில் மிகத் தெளிவாக கூறுகிறார். “சிற்றஞ்சிறுகாலே” வந்துன்னை சேவித்தோம் என்ற இப்பாசுரம் கம்பராமயணமத்தில் அனுமன் சொல்லிய செய்தித் தெளிவுக்கு இணையானது ஆண்டாளின் இப்பறை வேண்டுதல்

> “கண்டனென் கற்பினுக்கு
> அணியைக் கண்களால்”
>
> (சுந்தரகாண்டம்)

திருப்பாவையில்

> “எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
> உத்தன்னோடு உற்றோமே ஆவோம்
> உனக்கே நான்
> ஆட்செய்வாம்
>
> (பாசுரம்-29)

அதாவது சுந்தரகாண்டத்தில் சீதையைக் கண்டுவந்த அனுமன் ராமனிடத்தில் அதைக் கூறும் போது “**கண்டனென் கற்பினுக்கு அணியை” என்று ஒரே வரியில் மிகத் தெளிவாகச் செய்தியை உடைத்துக் கூறினார். அதே போல கண்ணனிடம் ஆண்கள் நாச்சியாரும்** “நாங்கள் தற்காலிகப் பரிசுக்கள் வரவில்லை, பிறவிப் பெருங்கடலை நீந்தி உனக்கே தொண்டு செய்ய வந்தோம் என தன் இலக்கை தெளிவாக விவரிக்கிறார்.

## வரம்புகளும் எதிர்கால ஆய்வுத் திசைகளும்

- இக்கட்டுரையின் வரம்புகள் ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த முப்பது திருப்பாவை பாசுரங்களுக்கு மட்டுமே உட்பட்டது.

## முடிவுரை

ஆண்டாள் எழுதிய திருப்பாவை என்பது சங்க இலக்கியங்களின் இயற்கை நயத்தையும்,

திருவள்ளுவரின் திருக்குறளின் தூய தொடர்பாடல் நெறிகளையும், காப்பியங்களின் செய்தித் தெளிவையும் தன்னுள் கொண்டு பக்தி என்ற ஊடகத்தின்

வழியாகச் சமூக ஒழுக்கத்தைக் கடத்திய ஒரு தகவல் தொடர்பியல் கலைக் களஞ்சியம் என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

கடினமான ஆன்மிகத் தத்துவங்களை எளிய இடைகுலப் பாமர மொழியில் மாற்றி, பக்தி என்னும் ஊடகம் மூலம் **“வையத்து வாழ்வீர்கள்”** என உலக மக்களை அழைத்து, தமிழ் மரபின் மிகச்சிறந்த தகவல் தொடர்பியல் பேரரசி (Empress of Communication) என்பதை இவ்வாய்வு முடிவுகள் ஆணித்தரமாகப் பறை சாற்றுகின்றன.

இது (திருப்பாவை)வெறும் வழிபாட்டு பனுவல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மானுட சமூகத்தையும் இணைக்கும் தொடர்பாடல் வழிகாட்டியாகும். “தான்” என்ற தனிமனித எல்லையைக் கடந்து **“நாமும் நம் பாவைக்கு” என்ற கூட்டுறவை (group identity) விதைத்ததன் மூலம் ஆண்டாள் பொதுவுடைமை பேசிய பெண்ணரசி என்பது நிருபனமாகிறது.**

## துணைநூற்பட்டியல்

1. ஆண்டாள் அருளிய திருப்பாவை (கி.பி. 8ம் நூற்றாண்டு)
2. திருக்குறள் - திருவள்ளுவர் மூலம் உரையும் தமிழ் இணையக் கல்விக்கழக வெளியீடு
3. சுப்புரெட்டியார் (1962) ஆண்டாளின் பிள்ளைத்தமிழ் மற்றும் திருப்பாவை விளக்கம்.
4. மு.வரதராசனார் (1972) தமிழ் இலக்கிய வரலாறு
5. **எஸ்.இராம** கிருஷ்ணன். **பக்தி இயக்கமும் தமிழ்** கம்யூனிகேஷன் - ஓர் ஆய்வு.